**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 122/2024**
**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. தெய்வம்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பெரியசாமி** | **Calling** | : | **காவல் கூடுதல் கண்காணிப்பாளர், திண்டுக்கல்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **58** |
| | | | **Dated** | : | **16.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 10), **திரு. தெய்வம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் 2018–ம் வருடம் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 11.05.2018 ம் தேதி 13.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. மகேஷ் என்பவர் மேற்படி நிலையப் பொறுப்பில் இருந்தபோது, கல்லுப்பட்டியைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்றுள்ளார். மேற்படி

புகார் மனு அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனுவின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 481/2018, சட்டப்பிரிவுகள் 392, 397, 506(ii) இ.த.சவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்தார். நான் அன்றைய தினமே 14.15 மணிக்கு எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று 14.30 மணிக்கு சாட்சிகள் சத்தியமூர்த்தி, கார்த்திகேயன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **நான் தயார் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 10 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சத்தியமூர்த்தி, கார்த்திகேயன், பழனிச்சாமி, நாகராஜ், சிவசிதம்பரம், சந்திரசேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினமே 16.30 மணிக்கு நத்தம் ரோடு, விஜய் தியேட்டர் முன்பு தகவலாளி அடையாளம் காட்டிய எதிரியான ரவி என்கிற முட்டைக்கண் ரவியை வழக்கின் காரணம் கூறி சாட்சிகளான சேவியர் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து தொடர்ந்து விசாரணை செய்தபோது, அவர் தானாக முன் வந்து சாட்சிகள் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும், ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்து தன்னிச்சையாக சாட்சிகள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம்அளித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு வாதியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி ரூ.500/– ஐ கொள்ளையடித்தாகவும், மேற்படி கொள்ளையடித்த ரூ.500/– யில் ரூ.300/– ஐ செலவழித்து விட்டதாகவும், மீதமுள்ள ரூ. 200/– ஐ ஆஜர்

செய்வதாகவும், தன்னை அழைத்துச் சென்றால் வாதியிடம் கத்தியைக்காட்டி மிரட்டி கொள்ளையடித்த இடத்தை அடையாளம் காட்டி, சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்துள்ள இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் 17.15 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த ரூ. 200/- ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே 17.45 மணிக்கு திண்டுக்கல், குள்ளனம்பட்டி, உணவு தானிய கிடங்கு அருகே உள்ள முட்புதருக்கு எதிரி மற்றும் சாட்சிகளுடன் சென்று, சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சிறிய இரும்பு கத்தி - 1 ஐ கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டேன். **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்கள் சாட்சிகளான சேவியர் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்துக்களான ரூ. 200/- மற்றும் சிறிய இரும்பு கத்தி - 1 ஆகியவற்றை தனித் தனியே படிவம் - 91ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி **ரூ. 200/-ன் படிவம் - 91 அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறிய இரும்பு கத்தி உள்ள படிவம் - 91 அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **மேற்படி ரூ. 200/- சா.பொ. 1 மற்றும் சிறிய இரும்பு கத்தி சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து எனது புலன் விசாரணை முடித்து,

வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 392 r/w 397 and 506(ii) இ.த.ச.வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கு சாட்சிகளான அசா. 1 முதல் அசா. 6 வரை உள்ளவர்கள் எனது விசாரணையின்போது வாக்குமூலத்தில் கூறியவாறுதான் கூறினார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

முதல் விசாரணையில் சொன்னது போன்று, சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் அசா. 1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் மனு பின்னிட்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களான பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடம் செல்லாமல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரம், தேதியில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும், அவரிடம் இருந்து எந்த வழக்குச் சொத்தும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 16.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.16 16:19:50 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**